பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 21 ஞாயிற்றுக்கிழமை 04.05.2025 | அதிர்வு 274

## தென்னிலங்கையில் ஒருவர் சுட்டுக்கொலை



தென்னிலங்கையில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலி, மீட்டியாகொட, தம்ப 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# ஐரோப்பிய ஒன்றியக் குழுவுடன் தமிழரசு இன்று விரிவான பேச்சு

## கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கக் கோருவர்

இலங்கைக்கு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய விசேட கண்காணிப்புக் குழுவினரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர் மட்டப் பிரமுகர்கள் இன்று இரவு 7 மணியாளவில் சந்தித்து உரையாட இருக்கின்றனர்.

கொழும்பு, புல்லர்ஸ் வீதியில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற இருக்கின்றது.

கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான குழுவில் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன். நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், வைத்தியர் இ.சிறிநாத், க.கோடீஸ்வரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். 02

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நிச்சயம் நீக்குவோம்!

## ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடமும் உறுதியளித்துள்ளோம் என்கிறார் ஜனாதிபதி



"பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக எல்லா வழிகளிலும் போராடியவர்கள் நாங்கள். எனவே, அந்தச் சட்டத்தை நிச்சயம் நீக்குவோம். ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடமும் இது தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டது."

– இவ்வரசு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

"எமது நீண்ட கால எதிர்பார்ப்புகளும், ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்கும் கருத்துக்களும் சமாந்தரமுடையவையாக உள்ளன என்று நான், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டினேன். 02



# வியட்நாமில் ஜனாதிபதிக்கு இன்று அமோக வரவேற்பு!

வியட்நாமின் நோய் பாய் சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங்கின் அழைப்பின் பேரில் வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டு நேற்று சனிக்கிழமை நாட்டிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார, இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வியட்நாமின் நோய் பாய் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு, ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும் வெளியுறவுத் துறை பிரதி அமைச்சருமான நுயென் மான் குவோங் உள்ளிட்ட அரச பிரதிநிதிகளால் அமோகமாக வரவேற்கப்பட்டனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் தி டேம்,வியட்நாமுக்கான இலங்கைத் தூதுவர் போசித பெரேரா மற்றும் இலங்கைத் தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவும் கலந்துகொண்டனர்.

இன்று மாலை, ஜனாதிபதி அநுர குமார, ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸ கட்சியின் மத்திய குழு தலைமையகத்தில் கம்யூனிஸக் கட்சியின் பொதுச்செயலாளர் டோ லாமைச் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி நாளை திங்கட்கிழமை வியட்நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

மேலும், மே 6 ஆம் திகதி ஹோ சி மிங் நகரில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் வெசாக் தினக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் ஜனாதிபதி அநுரகுமார, சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்த விஜயத்தின்போது இரு தரப்பினருக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடவும், வர்த்தக சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அரச விஜயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவினரும் இணைந்துகொண்டுள்ளனர்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1979 இல் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வந்தபோது அதற்கு எதிராகக் கறுப்புக்கொடி பறக்கவிட்டு, சிறைக்குச் சென்றவர்கள் எமது உறுப்பினர்கள்.

அதேபோல் 1988 மற்றும் 1989 காலப்பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நாமே கடுமையாகப் பாதிக்கப்பட்டோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகப் போராட்டங்களை நடத்தினோம். எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும் எனக் கூறினேன்.

சட்டமொன்றை இரத்துச் செய்யும் போது, சட்டத்தில் வெற்றிடம் இருக்கக் கூடாது. அவ்வாறான வெற்றிடத்துக்கு இடமளிக்காது, சட்டத்தை ஈடுசெய்யக் கூடிய வகையில் புதிய சட்டம் அவசியம். எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவும், புதிய சட்டத்தைக் கொண்டுவரவும் குழுவொன்றை நியமித்துள்ளோம்.” – என்றார்.

## தென்னில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹிட்டி யவில் நேற்று சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

மீட்டியாகொட பகுதியைச் சேர்ந்த 47 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மற்றைய நபருடன் விடுதியொன்றில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 46 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளதுடன் 52 வயதுடைய நபர் காயமடைந்த நிலையில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இருவரால் ரி – 56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. மீட்டியாகொட பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குத் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டு வரும் விசேட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை அடுத்த ஆண்டில் முடிவடைய இருக்கும் சூழலில், அதை நீடிப்பதா என்பது குறித்து ஆராய ஐரோப்பிய ஒன்றியக் குழு கொழும்பு வந்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல், இணையப் பாதுகாப்பு சட்டத்தை சீராக்குதல், நல்லாட்சி என்பவை தொடர்பாக இலங்கை சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமை குறித்து இன்றைய சந்திப்பில் தமிழரசுக் கட்சியினர் சுட்டிக்காட்டுவர் எனத் தெரிகின்றது.

தமிழருக்கு நீதி வழங்கப்பட வேண்டும், அதிகாரம் முறையான விதத்தில் பகிரப்பட வேண்டும் என்பவை தொடர்பில் இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுக்குமாறு இன்றைய சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தை தமிழரசுக் கட்சியினர் வலியுறுத்திக் கோருவர் என்றும் தெரிகின்றது.





# யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் கள ஆய்வு

(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக வாக்குப் பெட்டிகளை அனுப்பும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலாளரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் இன்று கள ஆய்வை மேற்கொண்டார்.

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க கலந்துகொண்டு தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்தக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேற்படி கள ஆய்வில் பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவி தெரிவாத்தாட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.









## கிளப் வசந்த படுகொலை:

# பிரதான சந்தேகநபரான ‘லொக்கு பெட்டி’ கைதாகி நாட்டு அழைத்து வரப்பட்டார்!



கிளப் வசந்த கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் இலங்கை பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

‘லொக்கு பெட்டி’ எனப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா என்ற பிரதான சந்தேகநபரே இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7:43 மணியளவில் டுபாயிலிருந்து வந்த விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பெலாரஸில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி அத்துருகிரிய பகுதியில் உள்ள பச்சை குத்தும் நிலையமொன்றின் திறப்பு விழாவுக்குச் சென்ற சுரேந்திர வசந்த பெரேரா எனும் கிளப் வசந்த என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான லொக்கு பெட்டி கொலை செய்யத் திட்டம் தீட்டி பணம் கொடுத்தார் என்று சந்தேகிக்கப்படுகின்றது.



# மீண்டெழுந்து வருகின்றன ஐ.தே.கவும் பெரமுனவும்!

## இப்படிச் சொல்கின்றார் ராஜித

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் மீண்டெழுந்து வருகின்றது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"அரசை நிர்வகிக்க முடியாவிட்டாலும் தேசிய மக்கள் சக்திக்கு நன்றாக அரசியல் செய்யத் தெரியும். இவர்களால் ஆட்சி யைக் கொண்டு நடத்த முடியாது என்பது மக்களுக்குத் தெரியும்.

வீழ்ந்த கட்டத்திலும் பார்க்க தற்போது ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த நிலையில் உள்ளது. ரணிலால் மட்டுமே நாட்டை மீட்க முடியும் எனக் கிராம பகுதி மக்கள் நம்ப ஆரம்பித்துள்ளனர். ரணிலின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகின்றது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தில் போட்டியிடுகின்றமையும் விசேட அம்சமாகும். எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறந்த பெறுபேறு கிட்டும் என நம்புகின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கும் வரவேற்பு உள்ளது. ஏனெனில் மொட்டுக் கட்சி வாக்குகளே தேசிய மக்கள் சக்தியை ச் சென்றடைந்தது. அந்த வாக்கு தற்போது மொட்டுக் கட்சி பக்கம் திரும்பி வருகின்றது." - என்றார்.



# தேர்தல் பிரசார போஸ்டர்கள் அகற்றும் நடவடிக்கை ஆரம்பம்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

எதிர்வரும் 06 ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் அனைத்தும் நேற்று சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியோடு நிறைவு பெற்றுள்ளது.

இந்த நிலையில் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற வேட்பாளர்களால் பொது இடங்களில் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் அனைத்தும் அகற்றும் நடவ டிக்கை இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் பொகவந்தலாவ பகுதியில் வேட்பாளர்களால் தேர்தல் பிரச்சாரத்தை முன்னிட்டு பொது இடங்களில் ஒட்டப்பட்ட அனைத்தும் போஸ்டர்களும் அகற்றும் நடவடிக்கை பொகவந்தலாவ பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் பொகவந்தலாவ பிரதேசத்தில் கொட்டியாக்கலை, கெம்பியன் கெர்க்கஸ்வோல்ட் கீழ்வட்டாரம் மற்றும் மேல் வட்டாரம் ஆரியபுர ஆகிய வட்டாரங்களில் ஒட்டப்பட்ட அனைத்தும் வேட்பாளர்களது போஸ்டர்கள் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் தினமான எதிர்வரும் 6 ஆம் திகதி அரச மற்றும் தனியார் துறையினருக்கு லீவு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினமான எதிர்வரும் 6 ஆம் திகதிக்கான விடுமுறை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

இதன்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் ஆறாம் திகதி அரச மற்றும் தனியார் துறையினருக்கு வேதனக் குறைப்பின்றி விடுமுறை வழங்குமாறு அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள தேர்தல்களை ஆணைக்குழு இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

இதன்படி, பல்கலைக்கழகங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் விடுமுறை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் குறித்த தினத்தில் விடுமுறை வழங்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# சித்த ஆயர்வேத ஒருங்கிணைந்த வைத்திய நிலையம் திறந்து வைப்பு

(எம்.ஏ.றமீஸ்)



திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தம்பட்டை பகுதியில் முற்று முழுதான இயற்கை வளங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள நிம்பா சித்த ஆயள்வேத ஒருங்கிணைந்த வைத்திய நிலையம் நேற்று சனிக்கிழமை (03) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

வைத்திய நிலையத்தின் ஸ்தாபகர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது தம்பட்டை தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தா ஜி மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஒன்றிணைந்த வைத்திய நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்த வைத்திய நிலையத்தில் இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பிரபல்யம் பெற்று காணப்படும் இயற்கை வைத்திய முறைகளில் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. இலங்கையிலும் பல்வேறு வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்று விளங்கும் பல நூற்றுக் கணக்கான இயற்கை மூலிகைகள், தாவரங்கள் போன்றன நடப்பட்டு இதன் மூலமாக மக்களுக்கு பக்க விளைவுகளற்ற சிகிச்சைகள் அளிக்கப்படவுள்ளன.

குறிப்பாக சித்த ஆயள்வேத வைத்தியம் யுனானி போன்ற வைத்திய சிகிச்சைகள் இங்கு வழங்கப்படவுள்ளன. அண்மைக் காலமாக குழந்தைகளை தாக்கி வரும் ஒட்டிசியம் எனும் நோயின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதோடு, இந்த நோயிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் விஷேட வேலைத் திட்டங்களும் இந்தச் சிகிச்சை நிலையத்தின் மூலம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் மத்தியில் உயிர் அச்சுறுத்தல்களை உண்டு பண்ணி வரும் தொற்று நோய் மற்றும் தொற்றா நோய் போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்து பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சை வழங்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சிகிச்சை நிலையத்தில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கேவலத்திலும் கேவலம்

இலங்கையில் 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை, நாளை என்று நடைபெறாமல் இழுபடும் - அல்லது நீடிக்கும் - சில விடயங்கள் பற்றி இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் கோடிகட்டி இருந்தோம். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழித்தல், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முறைமையை மாற்றுதல் என்பன அவற்றில் அடங்கும். அத்தோடு இன்னொன்று - பல்கலைக்கழகங்களில் ராகிங் கொடூரத்தை ஒழிக்கும் எத்தனம் ஆகும். அதுவும் நீண்ட பல ஆண்டுகளாக ஒழிப்போம், ஒழிப்போம் என்று கூறி நீடிக்க விடப்பட்டிருக்கும் ஒரு விவகாரம்தான். அது இன்னொரு உயிரை இப்போது பலி வாங்கிக் கொண்டிருக்கின்றது.

ராகிங் கொடூரத்தில் ஈடுபடும் மாணவர்களைத் தண்டிப்பதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் புதிய அதிகாரங்களைக் கொண்ட ஓர் அதிகாரியை ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் நியமிக்க உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. ராகிங் புகார்களைக் கையாளுவதற்குப் பொறுப்பாக சிறப்பான அதிகாரங்களோடு நியமிக்கப்பட்ட இந்த அதிகாரி, பல்கலைக்கழக நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருப்பார்.

"வார்டன்கள் மற்றும் மார்ஷல்கள் வளாகத்தில் இருந்தாலும், முறைப்பாடுகள் வரும்போது நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு முழு நிர்வாக அதிகாரம் இல்லை. அவர்கள் வெறுமனே முறைப்பாடளிக்க மட்டுமே முடியும். அவ்வளவுதான்.'' - என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் மூத்த பேராசிரியர் கபில செனவிரத்ன கூறினார்.

"பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற கவுன்ஸில் உறுப்பினர்கள் எங்களிடம் உள்ளனர். ஆனால் ராகிங் பிரச்சினை போன்றவற்றைக் கையாளத்தக்கவர்கள் ஒருபோதும் இல்லை. மேலும் விடயத்தை விசாரித்துத் தண்டிக்க ஒரு குறிப்பிட்ட அதிகாரம் கொண்ட அதிகாரி இருப்பது பொறுப்புக்கூறல் செயல்முறையை விரைவுபடுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று பேராசிரியர் கபில செனவிரத்ன கூறினார்.

தற்போது பல்கலைக்கழகங்களுக்கு புதிய கவுன்ஸில்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த செயல் முறையின் போது புதிய அதிகாரியின் பங்கு இணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டிலும், சமூகத்திலும் உரிமைகளுக்காக குரல் எழுப்பும் இளம் சமுதாயத்தினரான பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலேயே இந்த ராகிங் கொடூரம் - குரூரம் - குடி கொண்டிருப்பது என்பது நாகரீக மனித சமுதாயத்திற்கு பெரும் இழுக்காகும்.

இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டிய - நாகரிக மனித சமூகத்துக்கு ஒவ்வாத - இந்த ராகிங் காட்டுமிராண்டித்தனத்தை முழுமையாக இல்லாதொழிப்பதில் முழு நாடும் ஒற்றுமைப்பட்டு நிற்க வேண்டும். பகிடிவதைக் கொடூரம் இன்னும் இந்த நாட்டில் ஒரு 'பயங்கரவாதமாக' அர்த்தப்படுத்தப்படாமல் இருப்பது இந்த நாடு மனித நாகரிக சமூகம் என்று சொல்வதற்குத் தகுதியற்ற நிலையை தந்து நிற்கின்றது. நமது இளம் சமூகம் காமுகர்கள் கூட்டமாகவும் தறுதலைகளின் வேட்டைக்காடாகவும் இருப்பதை ஒழிப்பதற்கு இது விடயத்தில் தீவிரம் காட்டப்படுவது தவிர்க்க முடியாத கட்டாயம். போதைப் பொருள் கும்பல்களையும் பாதாள உலகக் குழுக்களையும் கையாளும் தீவிரத்தை விட அதிதீவிரத்துடன் இந்த ராகிங் மனநோயை அடக்க நடவடிக்கைககளை தயவு தாட்சண்யமின்றி எடுக்க வேண்டும். பிறப்புரிமைக்காக போராடியமையை பாஸிஸம் என்று வர்ணித்த நாடு, பகிடிவதை ஒழிப்பை கையில் எடுக்காமல் வாளாதிருப்பது கேவலத்தி லும் கேவலம்.




# தமிழ்த் தேசிய அரசியலில் மீதமிருக்கின்ற ஒரே நம்பிக்கை தமிழ்த்தேசியப் பேரவையே

## ஐங்கரநேசன் நேற்று உறுதிபடத் தெரிவிப்பு





தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஜனநாயக முறையில் போராட்டத்தை முன்கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வசமே இருந்தது. ஆனால் அது அந்தப் பொறுப்பை முள்ளிவாய்க்காலிலேயே வீசியெறிந்துவிட்டுத் தங்கள் சுயநல அரசியலை முன்னெடுக்க ஆரம்பித்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் எந்த சலுகைகளுக்கும் விலைபோகாது, எந்த நெருக்கடிகளுக்கும் அடிபணியாது, தமிழ்த்தேசிய விடுதலைப் உணர்வைக் காவிச் சென்றுகொண்டிருக்கிறது. அந்த வகையில் தற்போது தமிழ்த் தேசிய அரசியலில் மீதமிருக்கும் ஒரே நம்பிக்கையாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய தமிழ்த் தேசிய சக்திகளுடன் இணைந்து உருவாக்கியிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையே உள்ளது.

– இப்படித் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை ஆதரித்து யாழ்ப்பாணம் நக்கா வீதி இளங்கதிர் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடந்து உரையாற்றுகையில் –

ஜே.வி.பி. அதன் உருவாக்கம் தொட்டே தமிழினத்துக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந் கிறது. இந்திய – இலங்கை ஒப்பந்தம் உருவானபோது இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிரான போராட்டம் என்று சொல்லித் தமிழ் மக்களுக்கு எதிரான பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையுமே நடத்தியது. சுனாமி நிவாரணப் பணிகளுக்கென விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா அரசாங்கம் செய்துகொள்ள விருந்த ஒப்பந்தத்தை எதிர்த்துத் தனது நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகச்செய்தது. நீதிமன்றப்படியேறி அந்த ஒப்பந்தத்தை இல்லாமல் ஒழித்தது. வடக்கு – கிழக்கின் நிர்வாக ரீதியான இணைப்பைத் துண்டாடியது. சமாதானப் பேச்சு வார்த்தைகளை நிராகரித்து யுத்தவாதத்தை முன்வைத்தது. இந்த வரலாறு தெரியாதவர்களே ஜே.வி.பியைக் கொண்டாடுகிறார்கள்.

வெற்றி கொடுத்த தெம்பில் ஜே.வி.பி. தமிழ் மக்கள் தங்களோடுதான் என்றும், அநுர குமார திஸநாயக்கவைத் தமிழ் மக்கள் தங்கள் நம்பிக்கைக்குரிய தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும் பேசி வருகின்றது. தமிழ் மக்களில் கணிசமானோர் ஜே.வி.பிக்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினை என்று தனியான ஒரு பிரச்சினை இல்லை என்றும், இருப்பது வெறும் பொருளாதாரப் பிரச்சினை என்றும், அபிவிருத்தியின் மூலம் இதனைச் சரிசெய்து விடலாம் என்றும் தென்னிலங்கை அரசியல் வாதிகள் உலக அரங்கில் கூறிவருவதை மெய்ப்பிப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளோம். ஜே.வி.பிக்கு வாக்களிக்கும்போது கைவிரல்களில் பூசியது மை அல்ல, அது காலாகாலத்துக்குமான கறை என்பதை வாக்களித்தவர்களே இன்று உணர்ந்திருப்பார்கள்.

ஜே.வி.பியைத் தமிழ்த் தேசியப் பேரவை எதிர்ப்பதற்கும் ஏனைய கட்சிகள் எதிர்ப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. தமிழ்த் தேசியப் பேரவை ஜே.வி.பி. வெற்றி பெற்றால் தமிழ் மக்களின் இருப்பு பறிபோய்விடும் என்ற அச்சத்தில் எதிர்க்கிறது. ஏனைய கட்சிகளோ தங்களது ஆசனம் பறிபோய்விடும் என்ற அச்சத்தில் எதிர்க்கின்றன. இக்கட்சிகள் முள்ளிவாய்க்கால் யுத்தத்துக்குப் பின்னரான கடந்த 15 வருடங்களில் தமிழ்த் தேசிய அரசியலை ஒரு சில அங்குலங்கள்கூட முன்நகர்த்திச் செல்லவில்லை. தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் கூடிக்குலாவிச் சலுகைகளையும் மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களையும் பெற்றுத் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள். இந்தக் கையறு நிலையில் தமிழ் மக்கள் பற்றிக்கொள்ளக் கூடிய ஒரேயொரு சின்னமாக சைக்கிள் சின்னம் மட்டுமே உள்ளது. – என்றும் தெரிவித்துள்ளார்.

# பொது எதிரிக்கு எதிராக அணி திரளுங்கள் என தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கம் அழைப்பு!



பொது எதிரிக்கு எதிராக தமிழ் மக்கள் அணி திரள வேண்டும் என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முழு நாளும் மன்னார்ப் பகுதியில் அவரது அமைப்பினரால் வாக்காளர்களுக்கு வியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்திலேயே இவ்விடயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு :-

கடந்த 70 ஆண்டுகளாக மாறி மாறி பல தேர்தல் மூலம் பல கட்சிகள் ஆட்சிக்கு வந்துவிட்டன ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை நலிவடைந்தே போகின்றது. காலத்துக்குக் காலம் ஆட்சியாளர்கள் பல்வேறு விதமான வாக்குறுதிகளை வழங்கி தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியதும் தமிழ் மக்களை ஏமாற்றியதுமே வரலாறாக நீள்கின்றன. பன்னாட்டு அனுசரணையோடு செய்யப்பட்ட பல ஒப்பந்தங்களையும் காற்றில் பறக்க விட்டதே அரசின் தொடர்கதை.

தொடர்ந்து நிலப்பறிப்பு, குடிப்பரம்பல் மாற்றம் மொழிச் சிதைப்பு, பண்பாட்டுச் சீரழிப்பு, இனத்துவ ஏகாதிபத்திய அடக்குமுறை, இனவாத, வகுப்புவாத சிந்தனை, அரச திணைக்களங்கள் மூலம் நில அபகரிப்பு போன்ற பல்வேறு விதமான நெருக்கடிகள் தொடர்ந்து ஆட்சிக்கு வருபவர்களால் அரங்கேற்றப்படுகின்றன.

வடக்கு, கிழக்கிலே தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கும் முயற்சியிலே அரசாங்கம் முன்நோக்கி நகர்கின்றது. ஆட்சி அமைக்கின்ற எவரும் பௌத்த தேசியவாத மனநிலையில் இருந்தும் சிங்கள மேட்டிமைவாத சிந்தனையில் இருந்தும் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராகவில்லை. பௌத்த தேசிய இனவாதத்தின் அடிப்படையில் ஆட்சி நடத்துவதனால்தான் சமூக, சம நீதி, சமத்துவம், இனத்துவ - மொழித்துவ வேறுபாட்டின்மை போன்ற விடயங்களை குறைந்தபட்சமேனும் நோக்கு நிலையாக கொள்வதில்லை. பௌத்த பீடங்களை திருப்திப்படுத்தும், இராணுவத்தை மகிழ்ச்சிப்படுத்தும், சிங்கள அடிப்படைவாதிகளை சாந்தப்படுத்தும் வேலையிலேயே ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தற்போதைய அரசும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஆட்சிக்கு வர முன்னர் பல்வேறு விதமான இடதுசாரி தத்துவத்தை முன்வைத்தவர்கள், ஆட்சிக் கதிரையில் அமர்ந்த பின்னர் இயல்பான இனவாத வலதுசாரி வகுப்புவாதிகளாகவே மாறிவிட்டார்கள்.

நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை எல்லாம் தாராளமாக அள்ளி வீசியவர்கள், அதில் ஒரு சிலதை கூட நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

ஜே.வி.பியில் இருந்து என்.பி.பி. எனப் பெயரை மாற்றிக் கொண்டால் கடந்த காலத்து இனவாத சகதிகள் எதனையும் இன்றைய இளைய சமூகம் அறிந்திருக்காது என்கின்ற அற்ப ஆசையிலே இத்தந்திரத்தை உபயோகிக்கிறார்கள். அது தொடர்ந்தும் வெற்றியை நோக்கி முன்னகர்துமா என்பது கேள்விக்குறியே!

இலங்கையிலே இனவாதத்தை பட்டவர்த்தனமாக, பொதுவெளியிலே, சிங்கள மக்கள் மத்தியிலே வெறுப்புணர்வைத் தூண்டி, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பகைமையை ஏற்படுத்தியதில் மிகப்பெரிய பங்காற்றியவர்கள் ஜே.வி.பியினர் என்பது மறக்க முடியாத கடந்த கால வரலாறு. பெயரை மாற்றி விட்டால் மக்கள் மறந்து விடுவார்கள் என எண்ணுகிறார்கள் போலும். வடக்குக் கிழக்கிலே அரச ஒட்டுக் குழுக்களாக இருந்தவர்கள் இப்பொழுது ஜனநாயகவாதிகளாக தங்களைக் காட்டிக் கொள்வது போல்தான் இவர்களுடைய மாயவிம்பமும் தோன்றுகின்றது.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்ட போதும் உருப்படியாக எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும் பொய்யும் புரட்டுமாக பேசி வாக்கை தமதாக்கிக் கொள்ள முனைகிறார்கள். மக்களே விழித்துக் கொள்ளுங்கள். தமிழின அழிப்பாளர்களான ராஜபக்ஷக்களின் அடக்குமுறையைக் கூட துணிச்சலாக எதிர்கொண்ட தமிழ் மக்கள் ஜே.வி.பியின் என்.பி.பி. நாடகத்தை புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

குறிப்பாக மன்னார் போன்ற பிரதேசங்களில் காற்றாலை மின்சாரம், கனிம மண் அகழ்வு, கரையோர மண்ணகழ்வு ஆகிய மூன்று திட்டங்களுக்கும் கொள்கை அளவில் அரசாங்கம் ஆதரவாகவே இருக்கின்றது. இத்திட்டத்தை ஆதரிப்பவர்களுக்கு வாக்களிக்கலாமா?

வடமராட்சி கிழக்கு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை 5940 ஏக்கரை கபளீகரம் செய்வதற்கு அரசாங்கம் முயல்கிறது. இதை ஆதரிக்கலாமா?

எனவே தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களியுங்கள். அவர்களுக்குள் இருப்பது குடும்பச் சண்டை. அது விரைவில் தீர்ந்துவிடும். அந்தச் சண்டைக்குள் எதிரிகளுக்கும் துரோகிகளுக்கும் வாய்ப்பளித்தால் வடக்கு, கிழக்கிலே நாம் தனித்துவத்தையும் சுயமரியாதையும் இழந்தவர்களாகி விடுவோம். நீண்ட, நெடிய விடுதலைப் போரை நடத்திய இனம் வெறும் வாய்ச்சொல் வீரர்களுக்கு வாக்களிக்க முனைவது தேசத்துக்காக இழந்த எம்மவர்களின் ஆன்மா உங்களை ஒருபோதும் மன்னிக்காது. ஆகவே தென்னிலங்கையில் யாரும் எவருக்கும் வாக்களிக்கட்டும். வடக்கு, கிழக்கிலே எங்களை நாங்கள் ஆளக் கூடிய சுயநிர்ணய உரித்தை தகவமைத்துக் கொள்வதற்கு எமது இருப்பு எமக்கு முக்கியம். அற்ப, சொற்ப சலுகைகளுக்கும் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளுக்கும் உங்கள் வாக்கை அளித்து, வாழ்க்கையையும் இருப்பையும் இழந்து விடாதீர்கள். வாக்களிக்க முன் நான் ஏன் இவருக்கு வாக்களிக்க வேண்டும், அதனால் நம் இனத்துக்கும், எம் நிலத்துக்கும், என் பண்பாட்டிற்கும், அடுத்த சந்ததிக்கும், நான் மதிப்பிடும் அரசியல் கணக்கு என்ன என்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் வாக்குச்சாவடிக்கு போக முன்னர் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

தமிழர்கள் தமிழர்களாகவே தன் மானத்தோடு தலை நிமிர்ந்து தனித்துவமாகத் தமிழர் தாயகத்தில் வாழ்வதற்கு தமிழ்த்தேசியக் கட்சிகளை ஆதரி யுங்கள். அதுவே எமக்கான வரலாற்றுக் கடமையும் பொறுப்பும் தார்மீக உரிமையும் ஆகும். - என்று உள்ளது.

# மன்னாரில் 5 உள்ளூராட்சி சபைகளுக்கு 103 உறுப்பினர்கள்; 91,373 வாக்காளர்கள்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் 103 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெற இருக்கும் ஐந்து உள்ளூ ராட்சி சபைத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் நாளை (05) திங்கள்கிழமை காலை முதல் வாக்களிக்கும் பெட்டிகள் யாவும் அனுப்பி வைக்கப்படும் என்று மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகா ரியும் மன்னார் மாவட்ட செயலாளருமான க.கனகேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.

செவ்வாய்கிழமை (06) சகல மாவட்டங்களிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

அந்த வகையில் மன்னார் மாவட்டத் திலும் ஒரு நகர சபையிலும் நான்கு பிரதேச சபைகளிலும் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த ஐந்து சபைகளிலும் 103 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தெரிவுக்காக 114 வாக்களிப்பு நிலைகளில் 91373 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் நகர சபைக்கு 18 உறுப்பி னர்களைத் தெரிவு செய்ய 15 வாக்களிப்பு நிலையங்களில் 16196 வாக்காளர்களும்,

மன்னார் பிரதேச சபைக்கு 23 உறுப்பினர்களை தெரிவு செய்ய 24 வாக்களிப்பு நிலையங்களில் 24327



வாக்காளர்களும்,

நானாட்டான் பிரதேச சபைக்கு 19 உறுப்பினர்களை தெரிவு செய்ய 25 வாக்களிப்பு நிலையங்களில் 17858 வாக்காளர்களும்?,

முசலி பிரதேச சபைக்கு 19 உறுப்பினர் களை தெரிவு செய்ய 16 வாக்களிப்பு நிலையங்களில் 13858 வாக்காளர் களும்,

மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 24 உறுப்பினர்களை தெரிவு செய்ய 34 வாக்களிப்பு நிலையங்களில் 19134 வாக்காளர்களும் வாக்களிக்க இருக் கின்றனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மன்னார் மாவட்ட செயலாளருமான க.கனகேஸ் வரன் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நடைபெற இருக்கும் ஒரு நகர சபைக்கும் நான்கு பிரதேச சபைகளுக்குமான தேர்தலுக் கான சகல எற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளன.

செவ்வாய்கிழமை (06) நடைபெற இருக்கும் இந்தத் தேர்தலை முன்னிட்டு நாளை திங்கள்கிழமை (05) காலை 07 மணி தொடக்கம் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிப்ப பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் மன்னார் மாவட்ட செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லும் பணிகள் நடைபெறும்.

செவ்வாய்கிழமை (06) காலை 07 மணி தொடக்கம் வாக்களிப்பு ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து 114 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்ற வாக்களிப்பு பெட்டிகள் அந் தந்த வட்டாரங்களிலேயே 47 வட்டா ரங்களிலுள்ள பிரதான நிலையங்களில் வாக்குச் சீட்டுக்கள் எண்ணும் பணிகள் இடம்பெறும்.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து ஒவ்வொரு வட் டாரத் தெரிவுக்கான முடிவகள் அறி விக்கப்படும் என மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மன்னார் மாவட்ட செயலாளருமான க.கனகேஸ் வரன் தெரிவித்தார்.

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்:

# மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் மாபெரும் சிரமதான நிகழ்வு



(எஸ்.அஷ்ரப்கான்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத் தின் கீழ், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தோட்ட வளாகத்தில் மாபெரும் சிரமதான நிகழ்வொன்றை நேற்று (03) சனிக் கிழமை இடம்பெற்றது.

ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தோட்டப் பராமரிப்புக் குழுத் தலைவரும் உதவிச் செயலாளருமான எஸார் மீராசாஹிபின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில், அதன் தலைவர் டாக்டர் எம்.எச்.சனூஸ் காரியப்பர் தலை மையில், இந்தச் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம். முஹம்மட் முனாஸ், பொருளாளர் தொழிலதிபர் ஏ.எல்.எம்.முஸ்தபா, பிரதித் தலைவர் தொழிலதிபர் எம்.எம். எம்.முபாரக், உதவித் தலைவர் மௌலவி எம்.எம்.எம்.சலீம், உதவிச் செயலாளர் ஏ. பர்ஹாம், உதவிப் பொரு ளாளர் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தி யோகத்தர் எம்.நஜீம் உட்பட நம்பிக்கை யாளர் சபை உறுப்பினர்கள், தோட்ட பராமரிப்புக் குழுவின் முன்னணி செயற் பாட்டாளர்களான ஏ. ஜெஸ்மீர், எம்.ஐ. நஜீம் உட்பட தோட்டப் பராமரிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் மஹல்லாவாசி கள், ஜமாஅத்தினர், பிரதேச பொது அமைப்புகள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் இந்தச் சிர மதான நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# கல்லடியில் சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் அனுஷ்டிப்பு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் இராமகிருஷ்ணமிஷன் துறவியும் முத்தமிழ் வித்தகரும் சிவாநந்த வித்தியாலய ஸ்தாபகருமான சுவாமி விபுலாநந்தரின் 133 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கல்லடி, உப்போடை விபுலானந்த மணி மண்ட பத்திலுள்ள அடிகளாரின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (03) இராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் சுவாமி நீலமாத வானந்தாஜி மகராஜ் முன்னிலையில் இடம்பெற்றது. இதன்போது விழாச்சபை உறுப்பினர்கள், கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் இல்ல மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சுவாமிகளின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அத்தோடு சுவாமிகளால் இயற்றப்பட்ட “வெள்ளைநிற மல்லிகையோ...” என்ற பாடல் மாணவிகளால் இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# திருக்கோவில் தூய சூசையப்பர் ஆலய நூற்றாண்டு விழா ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் புனித சூசையப்பர் ஆலய நூற்றாண்டு விழா வெள்ளிக் கிழமை கோலாகலமாக ஆரம்ப மாகியது.

1925 ஆம் ஆண்டு ஆரம்பமான இந்த புனித சூசையப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழா, நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. விழா எதிர்வரும் 11 ஆம் திகதி திருப்பலி பூஜையுடன் நிறைவடையும்.

ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஜென்சன் லொயிட் அடிகளாரின் தலைமையில் முதல் நாள் கொடியேற்றத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் அருட்தந்தை அம்புறோஸ் மறையுரை ஆற்றினார் .

ஆலய முதல் நாள் நிகழ்வில் அவ்வட்டாரத்துக்கான தலைவி திருமதி யுவராஜினி ஆதி நாயகம் நன்றி உரை யாற்றினார். திருமதி வேர்ஜினி பிரசாட் மன்றாட்டு வழங்கினார்.

நூற்றுக் கணக்கான கத்தோலிக்க மக்கள் அங்கு கலந்து கொண்டு கொடியேற்ற திருவிழாவிலும் ஏனைய நிகழ்வுகளிலும் பங்குபற்றினர்.









# தமிழர்கள் திசைகாட்டிக்கு வாக்களித்தால் திசைமாறிய பறவைகளாய் அலைய நேரும்!

## இறுதி கூட்டத்தில் தமிழரசு வேட்பாளர் ஜெயசிறில்

( வி.ரி.சகாதேவராஜா)

தமிழ் மக்கள் திசைகாட்டிக்கு வாக் களித்தால் எதிர்காலத்தில் இருப்பை இழந்து திசைமாறிய பறவைகளாய் அலைய வேண்டி நேரிடும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சி யின் காரைதீவு கிளைத் தலைவரும், முன்னாள் தவிசாளரும், இந்நாள் வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் இறுதி பிரச்சாரக் கூட்டம் காரைதீவில் அவரது வட்டாரத்தில் நேற்று இரவு இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேட்பாளர் கி.ஜெயசிறில் மேலும் தெரிவிக்கையில்,

கருணா, பிள்ளையான் போல் தேர்த லுக்குப் பிறகு திசைகாட்டியும் சிதறி இருந்த இடம் தெரியாமல் திசை மாறும். அவர்களை எமது பகுதியில் காணமுடியாது.

எனவே அம்பாறை மாவட்ட தமி ழர்கள் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் தேசியக் கட்சிகளுக்குமே ஆணை வழங்கவேண்டும்.

தொடர்ச்சியாக இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபையை கைப்பற்றி வருகின்றது. இந்த முறையும் இலங்கை தமிழரசுக் கட்சியே காரைதீவு பிரதேச சபையில் ஆட்சி அமைக்கும். அதில் உணர்வுள்ள தமிழர்கள் நூறு வீதம் உறுதியாக உள்ளனர்.

நான்கு வட்டங்களையும் உங்கள் தமிழரசுக் கட்சியே ஆட்சி அமைக்கும். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

எமது மக்களை எமது மக்கள்தான் ஆள வேண்டும். எமது மண்ணை மாற்றானுக்கு தாரை வார்க்க முடியாது.

எமது மண்ணை மாற்றானிடம் தாரை வார்க்க இன்று மதியில்லாத சில கோடரிக் காம்புகள் தலைப் பட்டுள்ளனர். மருந்துக்கும் பொதுச் சேவை சமூக சேவை செய்யாதவர்கள் இவர்கள். மாற்றமாம், அபிவிருத்தியாம் என்றுநம்பிவாக்களிக்கதன்மானமுள்ள காரைதீவுத்தமிழன் ஒன்றும் கேணயன் அல்ல.

அவர்களது வரலாற்றை நாம் நன்கறிவோம். இந்த நாட்டில் தமிழன் இன்று உரிமையற்று வடகிழக்கு பிரிக்கப்பட்டு நாதியற்ற சமூகமாக மாறுவதற்கு மூலவிசையாக செயற் பட்டவர்கள் இந்த சிவப்பு அணியினரே.

எந்த மானமுள்ள ரோசமுள்ள தமிழனும் இதற்குப் பின்னால் போக மாட்டான்.

இந்த மண்ணை அபகரிக்க பயன் படுத்தப்படும் ஏவல் பேய்களே இன்றைய பெரும்பான்மைக்கட்சி வேட்பாளர்கள்.

தேர்தலுக்கு பின்னர் அவர்கள் தலைமறைவாகி விடுவார்கள். புரியா தவர்கள் புரிந்து கொள்ளுங்கள். புத்தி யும் மதியும் இல்லாதவர்களுக்கு இது புத்திமதி.

தேர்தல்கள் பலவிதம். ஜனாதிபதி தேர்தல் வேறு. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேறு. அது தேசத்துக்கானது. இது பிரதேசத்துக்கானது. அதில் பெரும்பான்மை சிங்களவர். இதில் பெரும்பான்மை தமிழர்கள். அது நாம் ஆளப்படுவதற்கானது. இது நாம் நம்மை ஆளுவதற்கானது. அது தேசத்தை காப்பதற்கானது. இது நம் மண்ணைக் காப்பதற்கானது. அது பல்லினம் சார்ந்தது. இது இரு இனங்கள் சார்ந்தது. அது பரந்தபட்ட அபிவிருத் திக்கானது. இது மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கானது. அதில் எமது தன்மானம் அழிக்கப்படும். இதில் நம் தன்மானம் காக்கப்படும். அன்று சாத கமான மாற்றத்தை விரும்பினோம். இன்று பாதகமான மாற்றத்தை தவிர்ப் போம்.

கண்போன போக்கிலே கால் போக லாமா. கால் போன போக்கிலே மனம் போகலாமா. மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா. மாமனிதன் போன பாதையை மறந்து போகலாமா. நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும். நீ சொன்ன வார்த்தைகள் காற்றோடு போகும். உனைப்பார்த்த உண்மைகள் உனக்காக வாழும். உணராமல் போவோர்க்கு உதவாமல் போகும். பொய்யான சில பேர்க்கு புது நாகரீகம். புரியாத பல பேர்க்கு இது நாகரீகம். முறையாக வாழ்வோர்க்கு எது நாகரீகம். முன்னோர்கள் சொன்

தொடர்ச்சி▼

# தமிழர்கள் திசைகாட்டிக்கு வாக்களித்தால் திசைமாறிய பறவைகளாய் அலைய நேரும்!

தொடர்ச்சி▲

னார்கள் அது நாகரீகம். திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம். வருந்தாத உருவங்கள் பிறந்தென்ன லாபம். இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும். இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்.

மக்களே! பெயர்கள் இரண்டு. முகங்கள் ஒன்று. கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது நீங்கள் அளித்த பொன்னான வாக்குகள்தான் இன்றுவரை உங்கள் நிரந்தர இருப்பை தக்கவைத்துள்ளது. இதை உணராமல், தவறாக நீங்கள் வாக்களித்தால், எதிர்காலத்தில் திசைமாறிய பறவைகளாய் எங்கேயோ வாழ நேரிடும்.

வாக்குரிமை உங்களின் சுதந்திரம். நீங்கள் இடும் புள்ளடியே உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். எனவே, ஆழ சிந்தித்து வாழ வாக்களியுங்கள். இந்த மண்ணை தன்மானத்தமிழன் ஆழ வேண்டும். அதற்கு ஆணை வழங்குங்கள்.– என்றார்.




# பாடசாலை மாணவர்களுக்கான பிரம்மாண்டமான விவாத அரங்கு

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக பாடசாலை மாணவர்களுக் கான பிரம்மாண்டமான விவாத அரங்கம் ஒன்று எதிர்வரும் 11 ஆம் திகதி 1.30 மணி முதல் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விவாத அரங்கில் வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களின் பிரதான பாடசாலைகளின் 8 விவாதக் குழுக்கள் பங்குபற்றவுள்ளன.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கிளிநொச்சி இந்துக் கல் லூரி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், வின்சென்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை, உவர் மலை விவேகானந்தா கல்லூரி, இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா ஆகிய பாட சாலைகள் அரங்கில் களம் காண வுள்ளன.

கிழக்கிலங்கையின் தமிழ் விவாத மன்றம் ஏற்பாடு செய்துள்ள "தர்க் கச்சூழல்" விவாத அரங்கின் இரண் டாவது போட்டி வழக்காடு மன்ற முறை யிலும் இறுதிப் போட்டி நாடாளுமன்ற விவாத முறையிலும் இடம்பெறும்.




இரண்டாவது போட்டி "குற்றவாளிக் கூண்டில் சாதியம்" எனும் தலைப்பிலும் இறுதிப்போட்டி இந்த அவையானது இன்றுவரை தமிழர்கள் தமக்கான தீர்வைப் பெற முடியாமல் போராடுவதற் கான அடிப்படைக் காரணம், தமிழ் அரசியல்வாதிகளின் வரலாற்றுத் தவறுகளே என்று நம்புகின்றது என்ற அடிப்படையிலும் விவாதிக்கப்பட வுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கின் மாணவ மாணவிகள் பங்குபற்றும் பிரமாண் டமான விவாத அரங்கை கண்டு களிக்க விழா ஏற்பாட்டாளர்கள் அனைவரையும் அழைத்து நிற்கின்றனர்.

திருமலை மண்ணில் முக்கிய அர சியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரி களின் முன்னிலையில் இந்த விவாத அரங்கு நடைபெறவுள்ளது.

# மட்டு. மாவட்ட வாக்குகளை எண்ண 144 வட்டார நிலையங்கள் அமைப்பு!

## மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 சபைகளுக்காக இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இந்த முறை 447 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

144 வட்டாரங்களில் இருந்து மேலதிக பட்டியலுடன் சேர்ந்து 274 பேர் தெரிவு செய்யப்படவுள்ளன என்று மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பு பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளது. அத்தோடு தேர்தல் பணிகளுக்காக இந்த முறை 6000 இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.

இதேவேளை 447 வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுகின்ற வாக்களிப்புகளை எண்ணுவதற்கு 144 வட்டார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மாவட்டத்தில் இந்த முறை நான்கு லட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.



50 இற்கும் குறைவான தபால் மூல வாக்குகளை எண்ணுவதற்காக விசேட நிலையங்கள் அமைக்கப்படும்.

தபால் மூல வாக்கெண்ணும் பணிகளுடன் இணைந்ததாக இறுதி தேர்தல் முடிவு வட்டார தேர்தல் எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியிடப்படும் என்று மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை

## பொலிஸார் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பிரச்சார நடவடிக்கைகள் முடிவடைந்து, அமைதி காலத்தில் சட்டத்தை மீறும் அனைவருக்கும் எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப் படுத்தப்படும் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று (03) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில் பொலிஸார் இந்த அறிவிப்பை விடுத் துள்ளனர்.

மேலும் அமைதி காலத்தில் சட்ட விரோதமாக சுவரொட்டிகள், பதாகைகள் அல்லது கட்அவுட்களை யாராவது காட்சிப்படுத்தியிருந்தால், அவை அகற்றப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரி வித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 65,000 இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் அமைதி காலத்தில் வேட் பாளர்கள் உட்பட அனைத்து தரப்பி னரும் எந்தவித பிரச்சார நடவடிக் கைகளிலும் ஈடுபட வேண்டாம் எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

339 உள்ளூராட்சி நிறுவனங்க ளுக்காக நடைபெறும் இந்தத் தேர்தல், நாளை மறுநாள் காலை 7 மணிக்குத் தொடங்கவுள்ளதுடன், 17,156,338 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த முறை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் இருந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்க ளின் எண்ணிக்கை 75,589 என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.



## பஹல்காம் தாக்குதல் எதிரொலி:

# பாகிஸ்தானிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்ய இந்தியா தடை

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் எதிரொலியாக பாகிஸ்தானில் இருந்து அனைத்து பொருள்கள் இறக்குமதிக் கும் இந்தியா தடை விதித்துள்ளது. இருதரப்பு கடித போக்குவரத்து, இந் திய துறைமுகங்களில் கப்பல்கள் நுழையவும்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த 22 ஆம் திகதி சுற்று லாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தானிலிருந்து செயல்படும் லஷ்கர்-இ தொய்பா அமைப்புக்கு இதில் தொடர்பு இருப் பது தெரியவந்தது. இதுகுறித்து தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) விசா ரணை நடத்தி வருகிறது. இந்த தாக்கு தலையடுத்து, பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்தது. இதுதவிர, விசா ரத்து, அட்டாரி-வாகா எல்லை மூடல் உள்ளிட்ட நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இந்த தாக்குதலில் தொடர்புடையவர் கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என பிரதமர் மோடி கடும் எச் சரிக்கை விடுத்தார்.

இதன் தொடர்ச்சியாக, பாதுகாப்பு அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோ சகர், முப்படை தலைமை தளபதி உள்ளிட்டோர் அடங்கிய உயர்நிலைக் குழுவைக் கூட்டி ஆலோசனை நடத் திய பிரதமர் மோடி, தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முப் படைகளுக்கும் முழு சுதந்திரம் வழங்கினார். இராணுவம் பாகிஸ்தான் எல்லையில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. முப்படைக ளும் தயார் நிலையில் உள்ளன.



இதுபோல இந்தியாவுடனான வர்த்த கத்துக்கு தடை விதித்த பாகிஸ்தான், தங்கள் வான் எல்லையில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதித்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையே போர் பதற்றம் நிலவுகிறது. இந்த சூழலில், இந்த தாக்குதலில் பாகிஸ் தானின் உளவு அமைப்புக்கும் (ஐ.எஸ்.ஐ) தொடர்பு இருப்பது என்.ஐ.ஏ. நடத்திய விசாரணையில் தெரியவந்து உள்ளது.

இந்நிலையில், இந்திய வெளி நாட்டு வர்த்தக இயக்குநரகம் (டி. ஜி.எப்.டி) நேற்று முன்தினம் வெளி யிட்ட அறிவிக்கையில்,

"பாகிஸ்தானிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து வகையான பொருள்களின் நேரடி அல்லது மறை முக இறக்குமதிக்கும் தடை விதிக் கப்படுகிறது. குறிப்பாக, வழக்கமாக சுதந்திரமாக இறக்குமதி செய்யக் கூடிய பொருள்கள் மற்றும் பிற விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பொருள்கள் உட்பட அனைத்துக்கும் இது பொருந்தும். இந்தக் கட்டுப்பாடு இறக்குமதிக்கு மட்டுமல்ல, இந்தியா வழியாக செல்லும் பொருள்களுக்கும் பொருந்தும்.

இந்த தடை உடனடியாக அமலுக்கு வருகிறது. மறு உத்தரவு வரும் வரை இது அமலில் இருக்கும். தேசிய பாது காப்பு மற்றும் பொதுக் கொள்கையை கருத்தில் கொண்டு இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை யிலிருந்து விலக்கு வேண்டுமானால், மத்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் ஆகும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உடனான கடிதப் போக்குவரத்துக்கு மத்திய அரசு நேற்று தற்காலிக தடை விதித்தது. இது தொடர்பாக மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்,

"பாகிஸ்தானிலிருந்து வான் வழியாகவோ அல்லது தரை வழி யாகவோ வரும் அனைத்து வகை கடிதங்கள் மற்றும் பார்சல்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து அந்த நாட்டுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மற்றும் பொதிகளுக்கும் இந்த கட்டுப்பாடு பொருந்தும்." என கூறப்பட்டுள்ளது.

மேலும் பாகிஸ்தான் கப்பல்கள் இந்திய துறைமுகங்களில் நுழைய வும் இந்திய கப்பல்கள் பாகிஸ்தான் துறைமுகங்களுக்கு செல்லவும் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற் றும் நீர்வழி போக்குவரத்து அமைச் சகம் தடை விதித்துள்ளது.

# இலங்கை கடல் கொள்ளையர் தாக்குதல்; தமிழக மீனவர்கள் 20 பேர் படுகாயம்

கடலில் மீன்பிடித்துக் கொண்டி ருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி, 10 லட்சம் ரூபா மதிப்பிலான வலை, ஜி.பி.எஸ். கருவி, மீன்கள் போன்றவற்றை பறித்துச் சென்றனர். இதில், 20 மீனவர்கள் காயமடைந்தனர் என தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நாகை மாவட்டம் அக்கரைப் பேட்டை மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்த் என்பவருக்கு சொந்தமான படகில், ஆனந்த் மற்றும் முரளி, சாமிநாதன், வெற்றிவேல், அன்பரசன் ஆகியோர் மீன்பிடிக்கச் சென்றனர். நேற்று முன்தினம் இரவு கோடியக் கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்கொள்ளையர்கள் 6 பேர் அதிவேக படகில் வந்து, கத்திமுனை யில் தாக்குதல் நடத்தி, வலை, ஜிபி எஸ் கருவி, மீன்கள் உள்ளிட்டவற் றைக் கொள்ளையடித்துச் சென்றனர்.



இதேபோல, செருதூர் கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல், வெள்ளப்பள்ளம் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த சுமதி, மாணிக்கவேல், ஆறுகாட்டுத்துறை யைச் சேர்ந்த துர்காதேவி ஆகியோ ருக்கு சொந்தமான படகுகளில் மீன் பிடித்த 19 மீனவர்கள் மீது, அடுத்த டுத்துஇலங்கைகடற்கொள்ளையர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தி, பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்த 5 தாக்குதல் சம்பவங்களிலும் பலத்த காயமடைந்த 20 இற்கும் மேற் பட்ட மீனவர்கள் நாகை அரசு மருத்து வக் கல்லூரி மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர் களில் 7 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து நாகை கடலோர காவல் படையினர் விசாரணை நடத்தி வருகின்ற னர்.

இந்திய எல்லையில் மீன்பிடித்த போது, இலங்கை கடல் கொள்ளை யர்கள் தங்களைத் தாக்கி, 10 லட்சம் ரூபா மதிப்பிலான பொருள்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர் எனவும் மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அடுத்த டுத்து 5 படகு களை தாக்கிய இலங்கை கடற்கொள் ளையர்களின் செயல் தமிழக மீனவர் களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள் ளது என தமிழக ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# காஸாவில் உணவுத் தட்டுப்பாடு 57 பாலஸ்தீனியர்கள் உயிரிழப்பு

காஸாவில் தற்போது நிலவும் கடுமையான உணவுத் தட்டுப்பாடு காரணமாக, இதுவரையில் சுமார் 57 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஸாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனிதாபிமான பொருள்களை இஸ்ரேல், காஸாவின் எல்லைப் பகுதியில் நிறுத்தி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இத்தகைய செயற்பாட்டிற்குப் பல நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, காஸாவின் பல பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் குழந்தைகள் மூவர் உள்ளிட்ட, 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# டெக்சாஸில் நில அதிர்வு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்திற்கு அருகில் 5.2 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வு தரை மட்டத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நியூ மெக்சிகோ மற்றும் வடக்கு மெக்சிகோவின் சில பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இந்த நில அதிர்வால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.




# பிலிப்பைன்ஸ் விமான நிலையத்தின் பிரதான வாயிலில் கார் விபத்து

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள நினாய் அக்வினோ சர்வதேச விமான நிலையத்தின் பிரதான வாயிலுக்கு அருகே, பாதசாரிகள் நடந்து செல்லும் பாதையில் கார் ஒன்று மோதியதில் இருவர் உயிரிழந்தனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் 4 வயது சிறுமி உட்பட இருவர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 3

ஞாயிற்றுக்கிழமை | 04/05/2025

டொரொன்டோவில் வீடு வாங்குவதைவிட வாடகைக்கு பெறுவது லாபகரமானது



C2 ▶



# கனடாவின் புதிய எக்ஸ்பிரஸ் என்ட்ரி டிரா: 1,000 பேருக்கு நிரந்தர குடியுரிமை வாய்ப்பு

2025 மே முதலாம் திகதி, கனடா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புதிய முடிவை எடுத்துள்ளது.

கல்வி துறையை மையமாகக் கொண்டு முதல் முறையாக எக்ஸ்பிரஸ் என்ட்ரி டிரா நடத்தி, 1,000 பேர் நிரந்தர குடியுரிமைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வை Immigration, Refugees and Citizenship Canada (IRCC) நிர்வகித்துள்ளது.

கனடாவின் பல மாநிலங்களில், குறிப்பாக ஒன்ராறியோ, பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் அல்பெர்டா மாநிலங்களில், தகுதியுள்ள ஆசிரியர்கள், ஆரம்பப்பள்ளி கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் குறைவாக உள்ளனர்.

C2 ▶

# ராணி கமீலாவுடன் மன்னர் சார்ல்ஸ் முதன்முறையாக கனடா பயணம்



மன்னர் சார்லஸ், சுமார் 50 ஆண்டுகளில் முதன்முறையாக கனடாவுக்கு பயணம் மேற்கொள்கிறார்.


மன்னர் சார்லசும் ராணி கமீலாவும், இம்மாதம், அதாவது, மே மாதம் 26 ஆம் திகதி கனடா செல்ல இருக்கிறார்கள்.

கனடாவில் தேர்தல்களுக்குப் பிறகு நாடாளுமன்றம் துவங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கனடா செல்கிறார் மன்னர்.

1977ஆம் ஆண்டு ராணி எலிசபெத் நாடாளுமன்றம் துவங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டதற்குப் பிறகு, இப்போதுதான் இப்படி ஒரு சம்பவம் நடக்க இருப்பதால், அது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சியாக கருதப்படுகிறது.

இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால், அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்ப், கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக ஆக்க இருப்பதாக மிரட்டிக்கொண்டே இருந்த விடயம் மன்னருக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆக, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல, நாடாளுமன்ற துவக்க விழாவில் கலந்துகொள்ளும் அதே நேரத்தில், கனடா தன் கட்டுப்பாட்டிலிருக்கும் நாடு என்பதை ட்ரம்புக்கு நினைவூட்டுவதற்காகவும் மன்னர் சார்லஸ் கனடா செல்கிறார் எனலாம்.



# டொரொண்டோவில் வீடு வாங்குவதைவிட வாடகைக்கு பெறுவது லாபகரமானது

டொரொண்டோ நகரத்தில் தற்போது வீடு வாங்குவதைவிட வாடகைக்கு வாழ்வது குறைந்த செலவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

Urbanation என்ற அறிக்கை நிறுவனம் வெளியிட்ட புதிய தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டு முதல் காலாண்டில் டொராண்டோ பெரும்பாக பகுதியில் ஒரு கான்டோ வீட்டு மாத வாடகை சராசரியாக 2,612 டொலர்களாக குறைந்துள்ளது.

இது கடந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்த 2,925 டொலர்கள்என்ற உச்சத்திலிருந்து 10 சதவீதம் குறைவடைந்துள்ளது.

இன்று டொரொண்டோவில் வாழ மிகச்சிறந்த செலவுசேமிப்பு வழி என்பது வாடகைதான்," என Century 21 நிறுவன விற்பனை பிரதிநிதி ஜோஷ் லாய்ட் தெரிவித்துள்ளார்.

வீடு வாங்கும் செலவு வாடகையைவிட 20 வீதம் அதிகமாக இருந்தால், வாடகைக்கு இருப்பது பொருளாதார ரீதியாக நன்மையுள்ளதாக மற்றொரு நிலம் முகவர் மைக்கேல் தேவநாதன் தெரிவித்தார்.

நகர மையப் பகுதிகளில் புதிய வீடுகள் அதிகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால், வாடகை வீதங்கள் குறைந்துள்ளன.

பல வாடகையாளர் உரிமையாளர்கள் 1 அல்லது 2 மாதங்கள் இலவச வாடகை போன்ற சலுகைகளை வழங்கி காலியாக உள்ள வீடுகளை நிரப்ப முயற்சித்து வருகின்றனர்.

மற்றொரு பக்கத்தில், வீட்டு விலைகள் பெரிய அளவில் குறையவில்லை. மார்ச் மாதம், டொராண்டோ பகுதியில் வீட்டு சராசரி விலை 1,093,254 டொலர்களாக இருந்தது – கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடும் போது இது வெறும் 2.5 வீதம் மட்டுமே குறைந்தது.

பல வீட்டு உரிமையாளர்கள் இன்று வாடகை வருமானம் மூலம் மாதம் தோறும் இழப்புகளை சந்திக்கின்றனர் என லாய்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஒரு வருடமாக, உரிமையாளர்கள் 1–2 மாதங்கள் இலவச வாடகையை வழங்கி காலி இடங்களை நிரப்ப முயற்சிக்கிறார்கள் – இது போன்ற சலுகைகளை இதற்கு முன் பார்த்ததில்லை என தேவநாதன் தெரிவித்துள்ளார்.

---

**கனடாவின்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இதனை சமாளிக்கவே, பிப்ரவரி 2025 இல் புதிய கல்வி வகை Express Entry-யில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த டிராவில் அழைக்கப்பட்டவர்கள் பின்வரும் துறைகளில் அனுபவம் மற்றும் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்:

தொடக்க மற்றும் மேல் நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.


ஆரம்பப்பள்ளி மற்றும் குழந்தைப் பருவக் கல்வி.

சிறப்பு தேவைகள் கல்வியாளர்கள்.

கல்வி நிர்வாகம் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்கள்.

இந்த டிராவின் குறைந்தபட்ச CRS மதிப்பெண் தற்போது வெளியிடப்படவில்லை. இருப்பினும், கல்வி நிபுணர்களுக்கான உயர் தேவை காரணமாக, இது சாதாரண டிராக்களை விட குறைவாக இருந்ததாக தெரிகிறது.

அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் 60 நாட்களுக்குள் முழுமையான நிரந்தர குடியுரிமை விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.




# ஹாமில்டன் பள்ளிவாசலில் கத்தி குத்து; மூவர் படுகாயம்

ஹாமில்டன் நகர மையத்தில் உள்ள ஒரு பள்ளிவாசலில் இடம்பெற்ற கத்தி குத்துச் சம்பவத்தில் தொடர்புடையதாக 40 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹாமில்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை பிற்பகல், யார்க் புலவர்ட் பகுதியில் உள்ள ஹமில்டன் பள்ளிவாசலுக்கு Hamilton Downtown Mosque-ல், எதிரில் ஏற்பட்ட மோதல், பள்ளிவாசல் உள்ளே வன்முறையாக மாறியதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர். ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார் (அவரது உயிருக்கு ஆபத்து இல்லை), மற்றொருவர் நிகழ்விடத்திலேயே சிகிச்சை பெற்றார், மேலும் மூன்றாவது நபர் பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாமில்டன் மவுண்டனில் அமைந்துள்ள வீடொன்றில் வசிக்கும் அப்துல்லா அல்க்லிப் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதல் கொலை முயற்சி உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்கள் குறித்த நபர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

முதலில் இரண்டு சந்தேகநபர்கள் தொடர்பில் போலீசார் விசாரித்திருந்த போதிலும், விரிவான விசாரணை முடிவில், இரண்டாவது நபர் சம்பவத்தில் தொடர்புடையவரல்ல என்று உறுதி செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 14 வயது சிறுமி துஷ்பிரயோகம் தமிழர் ஒருவர் மீது குற்றச்சாட்டு

கனடாவில் தமிழர் ஒருவர் தகாத செயலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

14 வயது சிறுமியை பல நாள்கள் கட்டாயமாக அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் என அந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யுதயஒ பகுதியைச் சேர்ந்த 30 வயது நபர் மீது பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

டர்ஹாம் பிராந்திய பொலிஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில், இந்த வழக்கு குறித்து விசாரணை புதன்கிழமை ஹாமில்டன் பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் தொடங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



14 வயது சிறுமி ஹாமில்டனில் இருந்து சந்தேகநபரால் கார் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு, யுதயஒ பகுதியில் பல நாள்கள் கட்டாயமாக அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார்.

இந்த தகவலின் அடிப்படையில், கௌரிசங்கர் கதிர்காமநாதன் என்ற பெயர் கொண்ட 30 வயது நபர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தற்காலிக காவலில் வைக்கப்பட்டுள்ள இவர் மீதான விசாரணை தொடர்கிறது என்றும், மேலும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.